

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சி 6வது வார்டு லட்சுமணன் நகரி 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டின் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு பூங்காவை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் திண்டிவனம் நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், நகர மன்ற உறுப்பினர் ஷேக் தில்ஷாத் பேகம் அக்பர் பேக் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### கத்தாரில் சாலை விபத்து: உயிரிழந்த

# திருவண்ணாமலை நவாஸ் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப்.2-

கத்தாரில் சாலை விபத்தில் உயிரிழந்த திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த நவாஸ் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதி உதவியினை வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவு வருமாறு:-

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பக்கிரிபாளையம் கிராமம், ரஹமான்பேட்டையைச் சேர்ந்த நவாஸ் (வயது 35) என்பவர் கத்தார் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக கார் ஓட்டுநராக பணிபுரிந்துவந்த நிலையில், கடந்த 25.8.2025 அன்று நிகழ்ந்த சாலை விபத்து ஒன்றில் உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

கத்தார் நாட்டில் சாலை விபத்தில் உயிரிழந்த நவாஸ் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த நவாஸ் அவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உத்தரவில் கூறியுள்ளார்.

### அரசு கல்லூரிகளில் – தற்காலிகமாக

# 560 கௌரவ விரிவுரையாளர்கள் பணி நியமனம்!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, செப். 2-

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் 560 கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 2025 - 2026 ஆம் கல்வியாண்டிற்கான மாணாக்கர்கள் சேர்க்கை நடைபெற்று வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏழை, எளிய மாணாக்கர்கள் உயர்கல்வியினை பெற வேண்டும், அனைவருக்கும் சமமான உயர்கல்வி கிடைத்திட வேண்டும் என்பதற்காக, அரசுக் கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும் புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 15,000க்கும் மேற்பட்ட கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டன. இதில் நிரந்தர உதவிப் பேராசிரியர்கள் பணியமர்த்தப்படும் வரை, மாணாக்கர்களுக்கான கல்வி கற்றலில் தொய்வு ஏற்படாமல் இருக்க கௌரவ விரிவுரையாளர்களை தற்காலிகமாக பணியமர்த்த முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

அதன்படி, 21.07.2025 அன்று கௌரவ விரிவுரையாளர்கள் தற்காலிக பணியமர்த்துதலுக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டது. தகுதியானவர்களுக்கு 18.08.2025 அன்று முதல் 28.08.2025 வரை அந்தந்த மண்டலங்களில் நேர்காணல் நடைபெற்றது.

நேர்காணல் முடிவில் தற்போது தற்காலிக கௌரவ விரிவுரையாளர்களின் தெரிவுப் பட்டியல் tngasa.org என்ற இணையதளத்தில் நேற்று (01.09.2025) வெளியிடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் தங்களது பயனர் குறியீடு (User id) மற்றும் கடவுச்சொல் (Password) வழியாக தாங்கள் தெரிவு செய்யப்பட்ட கல்லூரி மற்றும் விவரங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 08.09.2025க்குள் உரிய கல்லூரிகளில் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள் பணியில் இணைய வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### நிர்மலா ரவிச்சந்திரன் தலைமை!

# திண்டிவனத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், செப் 2-

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை மாதம் 15ஆம் தேதி சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் திண்டிவனம் குஷால் சந்த்மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திண்டிவனம் நகராட்சி ஆணையர் சரவணன் தலைமையில் திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் கலந்துகொண்டு முகாமினை தொடங்கி வைத்தார்.

முகாமில் 17,28வது வார்டுகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பயன்பெறுவதற்கும், மின் இணைப்பு பெயர் மாற்றம், சொத்து வரி உரிமம் பெற வேண்டி கோரிக்கை மனு அளித்தனர்.

இதை அடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திண்டிவனத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்து துறை சார்ந்த அதிகாரியிடம் கேட்டு அறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முகாமில் மனு கொடுத்தவர்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டுமென அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

முகாமில் திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், நகர மன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், ரேணுகா இளங்கோ, சந்திரன், ரம்யா ராஜா, மாவட்ட தொண்டரணி தலைவர் பிர்லா செல்வம், நகர பொருளாளர் அணி அமைப்பாளர் சுரேஷ், சுகாதார பணிகள் அலுவலர் செந்தில்குமார், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் ஆடிட்டர் பிரகாஷ், மருத்துவர் அணி சூரிய பிரகாஷ், கிளைச் செயலாளர் சேகர் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் செயலாளர்

# அனுஜார்ஜ் தந்தை ஜார்ஜ் மேத்யூ மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, செப். 2-**

**முதலமைச்சரின் செயலாளர் அனு ஜார்ஜ் அவர்களுடைய தந்தையார் ஜார்ஜ் மேத்யூ அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-**

என்னுடைய செயலாளர் அனு ஜார்ஜ் அவர்களுடைய தந்தையார் ஜார்ஜ் மேத்யூ அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன். உடனடியாக, அனு ஜார்ஜ் அவர்களைத் தொடர்பு கொண்டு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்.

அன்னாரின் பிரிவால் வாடும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### நெய்வேலியில்

# அ.தி.மு.க. - பா.ம.க. - மாற்றுக் கட்சி நிர்வாகிகள் 600 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

கடலூர், செப். 2-

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில், அ.தி.மு.க, பா.ம.க, த.வெ.க, அ.ம.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கொள்கைகளால் துணை முதல்வர் அவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சபா.இராசேந்திரன் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்வில், கிழக் கொல்லை ஆனந்த் அ.ம.மு.க, வினித் (பா.ம.க.) தலைமையில் 150 நிர்வாகிகள், பத்திரக்கோட்டை பிரகாஷ் (அ.ம.மு.க. ஊராட்சி செயலாளர்) தலைமையில் 100 பேர், ஆண்டிகுப்பம் மோகன் (அ.ம.மு.க. இளைஞரணி) மற்றும் சத்தமாம்பட்டு பழனிவேல் (தே.மு.தி.க. கிளைச் செயலாளர்) தலைமையில் 35 பேர், சத்தமாம்பட்டு அருள்முருகன் (பா.ம.க. கிளைச் செயலாளர்) தலைமையில் 30 பேர், ராதாகிருஷ்ணன் சத்தமாம்பட்டு அ.தி.மு.க. கிளைச் செயலாளர் தலைமையில் 25 பேர், சுரேஷ் அரசடிகுப்பம் (பா.ம.க.) தலைமையில் 25 பேர், சிறுத்தொண்ட மாதேவி சங்கரி (ஒன்றிய மகளிரணி செயலாளர், தி.மு.க.) தலைமையில் 50 பேர், எலந்தம்பட்டு பாண்டியன் (அ.தி.மு.க.) தலைமையில் 30 பேர், வீரமணி மற்றும் சதீஷ் (பாமக) தலைமையில் 25 பேர் என 600க்கும் மேற்பட்டோர் திமுகவில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சந்தோஷ்குமார், பண்ருட்டி தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் ராஜா, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய அவை தலைவர் வீர. இராமச்சந்திரன்,

மாவட்டப் பிரதிநிதிகள் ஜி.ஆர்.ஆடலரசன், எம்.ஜி.ஆர்.லட்சுமி நாராயணன், துணை செயலர் செல்வகுமார், பொருளாளர்கள் ஐயப்பன், ஆனந்த் ஜோதி, அரிதாஸ், சுந்தரவடிவேல், ஜனார்த்தனன், இராஜேந்திரன், லோகநாதன், நகர இளைஞரணி அமைப்பாளர் ஸ்டாலின், நெய்வேலி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் ஆனந்தன், குமார், சந்தியா, அன்பழகன், கலைச்செல்வன், பாபு, டாக்டர் செந்தில், கார்த்திகேயன், செந்தில் முருகன்,

பண்ருட்டி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் சத்தியமுருகன், ரவீந்திரன், அரிகிருஷ்ணன், கோபு, மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர் சேதுபதி, ஒன்றிய அமைப்பாளர் உதயகுமார், கார்த்திகேயன், பலராமன், தன்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


# தி.மு.க. இளைஞர் அணி

**சென்னை தெற்கு மாவட்டம்**
**பகுதி துணை அமைப்பாளர் நியமனம்**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதியில் புதிய துணை அமைப்பாளராக **அ.அப்துல் ரகீம், 3/205–டி, பிஸ்மில்லா நகர் 2–வது தெரு, வெட்டுவாங்கேணி, சென்னை–115** நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து கழகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை, சென்னை-18.
நாள் : 31-08-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெ. வைத்திலிங்கம்

**செப்டம்பர் 2 (2013)**



1959ல் தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி மாநிலம், முத்தியால்பேட்டை தொகுதியின் செயலாளர், அவைத்தலைவர், மாநில பிரதிநிதி மற்றும் புதுச்சேரி வடக்கு பகுதி துணைச் செயலாளர் போன்ற பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

புதுச்சேரி மாநிலக் கழக மூத்த முன்னோடியான இவர், இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் பொ. பத்மநாபன்

**செப்டம்பர் 2 (1991)**



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “அண்ணா விருது” பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**